[1972 ஆகஸ்ட் 17

கீழும் கொண்டுவரப்பட்டு அந்த நூல்களை எழுதியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டு வந்தது. அதைக் கூட சென்ற ஆண்டு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதில் முதல் பரிசு பெறுகிறவர்களுக்கு—புத்தகம் எழுதுகிறவர்களுக்கு—இரண்டாயிரம் ரூபாய் என்றும் இரண்டாவது பரிசு பெறுகிறவர்களுக்கு ரூபாய் ஆயிரம் வழங்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆண்டுதோறும் 20, 25 நூல்களுக்கு அப்படி ஊக்கம் தருகிற வகையில் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வழங்கும் திட்டம் இல்லை. நிரந்தரமாக வழங்குகிற திட்டம்தான் கலைஞர்களுக்கு, எழுத்தாளர்களுக்கு என்றிருக்கிற வயது முதிர்ந்த, வருமானம் இல்லாதவர்களுக்கு என்ற அதன் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

திரு. சொ. காவேரிமணியம் : இத்திட்டம் சமீபத்தில் சிறந்த இலக்கியங்களைப் படைத்து இறந்து போன குடும்பங்களுக்கு இது அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருக்கிறவர்களுக்குத்தான் அமல்படுத்தப்படுகிறது. இந்தப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் கூட அவர்கள் இறந்துவிட்டாலும் கூட சிறந்த புத்தகம் என்று தேர்ந்தெடுக்கும்போது அதற்காக வழங்கும் தொகை அவர்கள் குடும்பத்தினருக்குப் போய் சேரும்.

நாதஸ்வர மேதைகளுக்கு விருதுகள்

* 124 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர மேதைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருதுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர கலைஞர்களுக்கு விருது வழங்கிவருகிறது.

திரு. என். கிட்டப்பா : பல்வேறு துறைகளைச் சார்ந்த சிறந்த இசை வல்லுநர்களுக்கு நம் அரசு சிறந்த பரிசுகளை ஆண்டுதோறும் வழங்கிவருவதாகத் தெரிகிறது, நாதஸ்வர இசையைப் பொறுத்த

1972 ஆகஸ்ட் 17]

வரையில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிற நல்லதொரு இசைக் கருவியாகும் நாதஸ்வரம். எனவே அத்தகைய முறையில் நாயன இசை வாசிக்கும் சிறந்த வல்லுநர்களை ஆண்டுதோறும் அரசாங்கமே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்கு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் சிறந்த நாதஸ்வர வித்வான்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்கி வருகிறது. அந்தத் திட்டம் இப்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

1964–65-ல் திரு. திருவெண்காடு சுப்ரமணிய பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருதும், பட்டயமும் வழங்கப்பட்டது. 1965–66-ல் திரு. செம்பனார்கோயில் தட்சணாமூர்த்தி பிள்ளை அவர்களும், 1966–67-ல் திரு. பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்களும், 1967–68-ல் திரு. இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு பிள்ளை அவர்களும், 1968–69-ல் திரு. திருவிழிமழலை என். நடராஜசுந்தரம் பிள்ளை அவர்களும், 1969–70-ல் திரு. சிதம்பரம் எஸ். ராதாகிருஷ்ண பிள்ளை அவர்களும், 1970–71-ல் திரு. குளிக்கரை பிச்சையப்பா அவர்களும், 1971–72-ல் திரு. நாமகிரிப்பேட்டை கே. கிருஷ்ணன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்திய அரசின் சார்பாக குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படுகிற அத்தகைய தேசிய விருதுகள் திருவாடுதுறை திரு. டி. என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களுக்கும், திருவீழிமழலை திரு. எஸ். சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும், திருவடைமருதூர் திரு. பி. எஸ். வீருசாமி பிள்ளை அவர்களுக்கும் வழங்கப்பட்டன.

சிறந்த தவில் வித்வான்கள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்ட வகையில் 1961–62-ல் திரு. உத்தராபதி பிள்ளை அவர்களும், 1962–63-ல் திரு. திருக்கடையூர் சின்னையா பிள்ளை அவர்களும், 1963–64-ல் திரு. முத்துவீரு பிள்ளை அவர்களும், 1965–66-ல் கும்பகோணம் திரு. தங்கவேலு பிள்ளை அவர்களும், 1966–67-ல் திரு. கூறைநாடு கோவிந்தராஜ பிள்ளை அவர்களும், 1968–69-ல் மாயூரம் திரு. பி. பழனிவேல் பிள்ளை அவர்களும், 1969–70-ல் திரு. சி. பி. நாராயணசாமி பிள்ளை அவர்களும். 1970–71-ல் வலங்கைமான் திரு. ஏ. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்களும், 1971–72-ல் திருநகரி திரு. நடேச பிள்ளை அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.